பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir — மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 13 செவ்வாய்க்கிழமை 28.12.2021 கதிர் 281

## கிணற்றில் விழுந்து சிறுவன் உயிரிழப்பு


மெதிரிகிரிய, குசும்பொகுன பிரதேசத்தில் கிணறு ஒன்றில் விழுந்து ஒன்பது வயது சிறுவன் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குசும்பொகுன ஆரம்பப் பாடசாலையில் தரம் 4 இல் கல்வி கற்கும்

☞ 2

## காணாமல்போன பெண் உரப்பையில் கட்டிய நிலையில் சடலமாக இன்று மீட்பு

### கிளிநொச்சியில் திடுக்கிடும் சம்பவம்



கிளிநொச்சியில் நேற்று காணாமல்போயிருந்த பெண் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீடு அமைந்துள்ள அம்பாள்குளத்திலிருந்து சில கிலோமீற்றர்கள் தொலைவில் உள்ள யூனியன்குளத்தில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உரப்பையொன்றில்கட்டப்பட்டநிலையில்பாலமொன்றின் கீழ் சடலம் காணப்பட்டது எனப் பொலிஸார் தெரி

☞ 2

## மேயர் மணியை எதிர்த்து உறுப்பினர்கள் போராட்டம்



யாழ்ப்பாணம் மாநகர சபையின் மேயர் வி.மணிவண்ணனுக்கு எதிராக யாழ். மாநகர சபை முன்றிலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

☞ 2

### யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்

# முன்னாள் தலைவர், செயலாளருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை

## 30 மாதங்களின் பின் தாக்கல்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்துக்குள் 2019 மே 03ஆம் திகதி இராணுவத்தினர் நடத்திய தேடுதலின்போது, கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் இருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

☞ 2

## வெளிநாட்டில் இருந்து பரிசுப் பொருள்கள் வந்துள்ளன என்று 11 லட்சம் ரூபா மோசடி

### பெண்ணொருவர் விளக்கமறியலில்

வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற்குப் பணத்தை வைப்பிலிடுமாறு கோரி சுமார் 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்தவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

☞ 2

## விமல், வாசுதேவ, கம்மன்பிலவை அமைச்சரவையிலிருந்து நீக்கேன்!



### கோட்டாபய திட்டவட்டம்

அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பு தொடர்பில் அபத்தமான கருத்தைக் கொண்டுள்ளமையால் விமல் வீரவன்ஸ, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகிய மூன்று அமைச்சரவை அமைச்சர்களைப் பதவிகளில் இருந்து நீக்குவதில் தனக்கு எவ்வித அவசியமும் இல்லை என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக நிறுவனங்

☞ 2

## மரம் வெட்டிய நபருக்கு எமனாக மாறியது மரம்

யாழ்ப்பாணம், தெல்லிப்பழை பகுதியில் மரம் வெட்டியவர் மீது மரம் விழுந்ததில் அவர் உயிரிழந்துள்ளார்.

தெல்லிப்பழை பகுதியைச் சேர்ந்த எட்வேட் மதிவண்ணன் (வயது-41) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த நபர் தெல்லிப்பழை பகுதியில் கூலிக்கு

☞ 2

## பெப்ரவரி மாதமளவில் உரப்பிரச்சினைக்குத் தீர்வு



### உறுதியளித்தது அரசு

முன்பதிவு செய்யப்பட்ட உரத்தொகை நாட்டுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது எனவும், அடுத்த வருடம்பெப்ரவரிமாதமளவில்உரப்பிரச்சினைக்கு முழுமையாக தீர்வு எட்ட முடியும் எனவும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

நிவாரண முறையில் எதிர்காலத்தில்

☞ 2

## சிறிதரனின் நிதி ஒதுக்கீட்டில் வடமராட்சி கிழக்கில் உதவி!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

☞ 2



## பூநகரியில் இளைஞர் கொலை; பெண் உட்பட நால்வர் சிக்கினர்

கிளிநொச்சி மாவட்டம், பூநகரி - கௌதாரிமுனை பகுதியில் சுற்றுலா சென்றவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

☞ 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## கிணற்றில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எச்.கே.சமந்த கவிந்து சந்தருவன் குமார என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சிறுவன் விளையாடிக் கொண்டிருந்த பந்து இரண்டு நாள்களுக்கு முன் வீட்டின் பின்புறமுள்ள கிணற்றில் விழுந்துள்ளது. பந்தை எடுத்துத் தருமாறு பலமுறை கேட்டும் தந்தை அதை மறந்துள்ளார்.

தாய் தனது இளைய சகோதரனுடன் அயல் வீட்டுக்குச் சென்றிருந்தபோது குறித்த சிறுவன் கிணற்றிலிருந்து பந்தை எடுக்க முற்பட்டபோதே கிணற்றில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சிறுவன் காணாமல்போயுள்ளார் என்று பெற்றோர் மெதிரிகிரிய பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ததன் பின்னர் பல்வேறு இடங்களில் பெற்றோர் சிறுவனைத் தேடியுள்ளனர். இருந்தபோதும் சிறுவன் கிடைக்கவில்லை.

கிணற்றில் விழுந்தது எனக் கூறப்படும் பந்து முற்றத்தில் காணப்பட்டுள்ளது. அதன்பின்னர் மேற்கொண்ட தேடுதலின்போது தோட்டத்தில் பாதுகாப்பற்ற நிலையில் கட்டப்பட்டிருந்த கிணற்றில் வீழ்ந்த நிலையில் சிறுவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மெதிரிகிரிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## காணாமல்போன .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வித்தனர்.

லண்டனில் மகனுடன் வசித்து வந்த இராசேந்திரம் இராசலட்சுமி (வயது- 67) என்பவர் கடந்த மூன்று வருடங்களின் முன் இலங்கை திரும்பியுள்ளார்.

கிளிநொச்சி, உதயநகர் பகுதியில் உள்ள தனது காணியைப் பார்ப்பதற்காக அம்பாள்குளம் பகுதியில் வாடகைக்கு வீடெடுத்து தங்கியிருந்துள்ளார்.

தனியாக வசித்து வந்திருந்த நிலையில் நேற்று வங்கிக்குச் சென்று திரும்பினார் எனவும், பிற்பகல் 3 மணி முதல் 6 மணிக்கு இடைப்பட்ட நேரத்தில் அவர் காணாமல்போயிருந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

குறித்த பெண் இவ்வாறு காணாமல்போயுள்ள விடயம் நேற்று மாலை 7.20 மணியளவிலேயே உறவினர்களுக்குத் தெரியவந்துள்ளது.

குறித்த பெண் காணாமல்போயுள்ளமை தொடர்பில் வீட்டு உரிமையாளரால் நேற்று மாலை 6 மணியவில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். வீட்டின் உள்ளே இரத்தக் கறைகள் காணப்பட்டமையால் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

இவ்வாறு காணாமல்போயுள்ள பெண் பூநகரி, தம்பிராய் பகுதியைச் சேர்ந்தவர் என்றும், அவரது 5 பிள்ளைகளும் வெளிநாட்டில் வசித்து வருகின்றனர் என்றும், கணவர் விவசாயம் செய்து வருகின்றார் எனவும் தெரியவந்தது.

இந்தநிலையிலேயே சடலம் யூனியன்குளத்தில் இன்று மீட்கப்பட்டது.

இதேவேளை, இந்த வீட்டில் வாடகைக்குக் குடியிருந்த ஆசிரியை ஒருவர் கடந்த சில வருடங்களின் முன்னர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் தலைவர், ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதனடிப்படையில் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் உள்ள சான்றுப் பொருள்களை பாரப்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு மே 3ஆம் திகதி இராணுவத்தினர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்திலும், விடுதிகளிலும்பெருமெடுப்பில்சோதனைகளை முன்னெடுத்தனர்.

நூற்றுக்கணக்கான படையினர் இந்தத் தேடுதலில் ஈடுபட்டனர்.

இந்தத் தேடுதலின் போது, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அறையில் இருந்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் படம், மற்றும் இனப்படுகொலைகள் தொடர்பான சில பதாதைகள் உள்ளிட்டவை கைப்பற்றப்பட்டன.

இதையடுத்து, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ். கபில்ராஜ் ஆகியோர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதன்போது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு இராணுவ அதிகாரியால் எழுத்துமூல ஆவணம் ஒன்று பொலிஸாரால் சமர்ப்பிக்கப்பட்டது.

அன்றைய தினம் முன்னிரவு யாழ்ப்பாணம் நீதிவானின் இல்லத்தில் மாணவர்கள் இருவரும் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மாணவர்கள் இருவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் உப விதிகளின் கீழான ஏற்பாடு மற்றும் சர்வதேச குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான பட்டயம் ஆகிய நான்கு ஏற்பாடுகளின் கீழ் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

அதனால் மாணவர்கள் இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிரான வழக்கை தள்ளுபடி செய்யும் விண்ணப்பத்தை நிராகரித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் வழங்கிய கட்டளை மீது யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் சீராய்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

நான்கு குற்றச்சாட்டுகளில் மேன்முறையீட்டு நீதிமன்றால் மட்டும் பிணை வழங்கக் கூடிய பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டை மீளப் பெறுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு சட்ட மா அதிபரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரும் 13 நாள்களின் பின்னர் மே 16ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் சுமார் 30 மாதங்களின் பின்னர் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளருக்கு எதிராக குற்றப்பத்திரிகை கொழும்பு மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக வளாகத்தில் 2019 மே 3 ஆம் திகதி நடத்திய தேடுதலில் மருத்துவபீட சிற்றுண்டிச்சாலையில் தியாக தீபம் திலீபனின் ஒளிப்படம் ஒட்டப்பட்டிருந்தமையை அடுத்து சிற்றுண்டிச்சாலை நடத்துநர் கைது செய்யப்பட்டார். அவர் 12 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் அவர் மீதான வழக்கு பொலிஸாரால் மீளப்பெறப்பட்டது.

## மரம் வெட்டிய .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேப்ப மரம் ஒன்றை வெட்டியபோது அந்த மரம் அவர் மீதே சரிந்து விழுந்ததில், அவர் மரத்தினுள் அகப்பட்டு படுகாயங்களுக்கு உள்ளானார்.

அதையடுத்து அவர் அங்கிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட நிலையில், அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

## வெளிநாட்டில் இருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி - திருமுறிகண்டி பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரை கிளிநொச்சியைச் சேர்ந்த மற்றொரு பெண் தொடர்புகொண்டு வெளிநாட்டிலிருந்து பெறுமதியான பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும், அதனைப் பெறுவதற்குப் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறும் கூறியுள்ளார்.

இதற்கமைய முறிகண்டியைச் சேர்ந்த பெண் சுமார் 10 லட்சத்து 85 ஆயிரம் ரூபா பணத்தை வங்கியில் வைப்பிலிட்டுள்ளார்.

இது தொடர்பில் கடந்த செப்டெம்பர் மாதம் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது .

அதன்பின் பொலிஸாரின் விசேட நடவடிக்கை மூலம் கொழும்பு தெமட்டகொடைப் பகுதியில் வைத்து, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட்ட நிலையில், எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பெப்ரவரி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உரம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

இதன்படி, 100 கிலோ கிராம் பச்சைக் கொழுந்துக்கு 40 கிலோ உரம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

உரம் மற்றும் பூச்சிக் கொல்லிகள் இன்மையால் மரக்கறிகளின் அறுவடை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்காரணமாக மரக்கறிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்துள்ளன.

நாட்டின்பெரும்பாலானபொருளாதார மத்திய நிலையங்களில் பச்சை கொச்சிக்காய் கிலோ ஒன்றின் சில்லறை மற்றும் மொத்த விலை 800 ரூபா முதல் ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது.

இதுதவிர, போஞ்சி, கரட், பீட்ரூட், லீக்ஸ் மற்றும் கோவா ஆகியவற்றின் மொத்த விலை 220 ரூபா முதல் 500 ரூபாவாகக் காணப்படுகின்றது.

## விமல், வாசுதேவ, .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களின் பிரதானிகளுடனான சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

கூட்டுப் பொறுப்பில் எடுக்கப்படும் தீர்மானங்கள் தொடர்பில் கருத்து வேறுபாடுகள் இருப்பின் அமைச்சரவையைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்குப் பதிலாக அதிலிருந்து விலகி கருத்து வெளியிடுவதே சிறந்தது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

பிரேமதாஸவின் ஆட்சிக்காலத்தில் கூட்டுப்பொறுப்பைமீறியமைதொடர்பில் லலித் அத்துலத்முதலி மற்றும் ஜி.எம். பிரேமசந்திர ஆகிய அமைச்சர்களுக்கு எதிரான வழக்கில் நீதிபதி மார்க் பெர்னாண்டோ வழங்கிய தீர்ப்பை ஜனாதிபதி இதன்போது நினைவுகூர்ந்தார்.

## மேயர் மணியை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாநகர சபை உறுப்பினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாநகர சபை அமர்வு இன்று இடம்பெற்றபோது மேயரின் செயற்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்து மாநகர முன்றிலில் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது 'மேயரின் அராஜகம் ஒழிக, சபையின் மாண்பைக் காப்பாற்று, வர்த்தகர்களின் வயிற்றில் அடிக்காதே' போன்ற கோஷங்கள் மாநகர சபை உறுப்பினர்களால் எழுப்பப்பட்டன.

## சிறிதரனின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்கமைய வெண்ணிலா விளையாட்டுக்கழகத்தின் புனரமைப்புக்காக ஒரு லட்சம் ரூபாவும், வெற்றிலைக்கேணி சென் செமபஸ்ரியர் விளையாட்டுக்கழகம், ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம், உடுத்துறை பாரதி விளையாட்டுக்கழகம், நாகர் கோவில் நாகதீபம் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றுக்குத் தலா ஐம்பதாயிரம் ரூபா வீதமும் நிதி ஒதுக்கப்பட்டே குறித்த விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்துகொண்டார். அத்துடன் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா. அரியகுமார், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்களான ஆ.சுரேஷ் குமார், சி.பிரசாத், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கிராம சேவகர்கள், அதிகாரிகள், விளையாட்டுக் கழகங்களின் உறுப்பினர்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## பூநகரியில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கைதுசெய்யப்பட்ட 4 சந்தேகநபர்களும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்கள்.

கடந்த 26ஆம் திகதி நடந்த மோதலில், ஆனைக்கோட்டை - சோமசுந்தரம் வீதியை சேர்ந்த ரஞ்சன் நிரோஷன் என்ற 22 வயதுடைய இளைஞர் கத்தியால் குத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 46 வயதான பெண் மாற்று 51, 55, 40 வயதுகளையுடைய ஆண்களே கைதாகியுள்ளனர்.

அவர்கள் பயணித்த படகும் இயந்திரமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

பூநகரி பொலிஸாரினாலேயே அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# அற்பத்தன விதிமுறை

கோமாளித்தனமான நாடு இலங்கை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகின்றனர் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள்.

நாட்டின் மீயுயர் சட்டம் அரசமைப்பு. ஆனால் அதில் முப்பத்தியைந்து வருடங்களாக எழுத்தில் இருக்கும் சட்ட விதிகளை – ஏற்பாடுகளை – நடைமுறைப்படுத்த மாட்டோம் என்று மாறி மாறி வருகின்ற அரசாங்கங்கள் அடம்பிடித்து நிற்கின்றன. அதைக் கேட்பார் ஒருவர் இல்லை.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் கீழ் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் பகிரப்பட்டவை என்கின்றது அரசமைப்பு. ஆனால் அதனை நடைமுறைப்படுத்த மறுக்கின்றன தொடர்ந்து வந்த ஆட்சிப் பீடங்கள். நாட்டின் மீயுயர் சட்டமான அரசமைப்பை இப்படி நடைமுறைப்படுத்த மறுப்பது மிகப் பெரும் தேசாபிமானம் என பௌத்த, சிங்கள பேரினவாதம் தலையில் வைத்துக் கொண்டாடுகின்றது.

மறுபுறத்தில் அரசமைப்பு மூலம் மக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை மறுக்கும் விதத்தில் தம்பாட்டில் சுற்றறிக்கைகளை அனுப்பி நடைமுறைப்படுத்த முயல்கின்றார் நாட்டின் பதிவாளர் நாயகம். அதைக் கேட்பாரும் யாரில்லை.

திருமணம் என்பதும், அது தொடர்பான தீர்மானம் என்பதும், திருமணம் செய்யப் போகின்றவரின் தனி உரித்து. அதிலே தலையிடும் விதத்தில் சுற்றறிக்கை மூலம் முறையற்ற அதிகாரத்தைத் திணிக்கின்றது ஆட்சிப்பீடம்.

இலங்கையர்கள் இங்கு வெளிநாட்டவர்களைத் திருமணம் செய்வதானால் பாதுகாப்பு அமைச்சின் முன் அனுமதி பெற வேண்டும் என்ற புதிய விதிமுறை தனி மனித உரிமைகளில் எல்லை தாண்டி தலையீடு செய்யும் அதிகப்பிரசங்கித்தனமாகும்.

இதில் இரண்டு விடயங்கள் உள்ளன.

இலங்கையர் ஒருவர், வெளிநாட்டவரை இலங்கையில் வைத்துப் பதிவுத் திருமணம் செய்வது என்றால்தான் இந்த சிக்கெடுப்பு. ஆகவே, இந்தியாவுக்குப் போயோ அல்லது மணமகன் அல்லது மணமகளின் சொந்த நாட்டிலோ போய் திருமணம் செய்வதற்கு செல்லுபடியாகக் கூடிய விதிமுறையே அல்ல இது. இலங்கையர் அப்படிப் போய் திருமணம் செய்து விட்டு அந்தப் பதிவுச் சான்றிதழுடன் வந்தால் அந்தத் திருமணத்தை ஏற்க முடியாது என்று இலங்கை அரசு அறிவிக்கப் போகின்றதா?

அடுத்து, திருமணம் செய்ய இருக்கும் வெளிநாட்டவர் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சு முன் அனுமதி – Clearance – வழங்க வேண்டும் என்ற விதிமுறைப்படி பார்த்தால் பாதுகாப்பு அமைச்சிடம் 'கிளியரன்ஸ்' பெறக் கூடியவர்களை மட்டும்தான் திருமணம் செய்யலாம். மற்றவர்களைத் திருமணம் செய்ய முடியாது என்று தடை விதிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சுக்கோ அரசுக்கோ என்ன அதிகாரம் உண்டு? சரி, சம்பந்தப்பட்ட நபர் கொள்ளையராகவோ, திருடனாகவோ, சட்டத்தை மீறியவராகவோ இருக்கட்டுமே. அப்படிப்பட்ட ஒருவரைத் தனக்குப் பிடித்திருக்கின்றது என மற்றொருவர் திருமணம் செய்ய முற்பட்டால் அதை என்ன காரணத்தைக் காட்டி அரசோ பாதுகாப்பு அமைச்சோ தடுக்க முடியும்?

சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நபருக்கு 'கிளியரன்ஸ்' கொடுப்பதற்கு என்ன காரணம் தடையாக இருக்கின்றது எனப் பாதுகாப்பு அமைச்சு கருதுகின்றதோ, அந்த விடயத்தை ஒட்டி உரிய சட்ட நடவடிக்கை ஏதேனும் எடுக்க முடியுமானால் பாதுகாப்பு அமைச்சு – அரசுத் தரப்பு – அது குறித்து மேற்கொண்டு உரிய சட்டச் செயற்பாடுகளை மேற்கொள்ளலாம். அதற்காக அந்நபரை விரும்பும் இன்னொருவர் திருமணம் செய்வதை அரசினால் தடுக்க முடியாது; தடுக்கக் கூடாது.

இந்தச் சுற்று நிருப விதிமுறை அடிப்படை உரிமைகளிலேயே அத்துமீறிக் கைவைக்கும் அற்பத்தனமாகும்.

# எரிபொருள் விலையேற்றத்தால் ஓட்டோவில் போனார் எம்.பி.!



எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக ஆடம்பர வாகனங்களைப் பயன்படுத்த முடியாது எனக் கூறி, நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஓட்டோவில் ஏறி பயணித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஹர்ஷ டி சில்வாவே இவ்வாறு தானே ஓட்டோவை ஓட்டியவாறு அதில் பயணம் செய்துள்ளார்.

பொருளாதார கஷ்டங்கள் காரணமாக ஓட்டோவில் பயணிப்பதிலும் மக்களுக்கு சிரமமான நிலைமை ஏற்பட்டுள்ளதாக ஹர்ஷ டி சில்வா ஊடக சந்திப் பொன்றில் கூறியிருந்தார்.

எது எப்படி இருந்த போதிலும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா, தொடர்ந்தும் ஓட்டோவில் பயணம் செய்வாரா அல்லது இது ஊடக கண்காட்சியா என்பதை அறிய மேலும் சில தினங்கள் காத்திருக்க வேண்டும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்களை விடுவிக்க ஏற்பாடு

## அமைச்சர் பந்துல உறுதி



கொழும்பு துறைமுகத்தில் இருக்கும் அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய கொள்கலன்கள் அடுத்த வாரம் விடுவிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

குறித்த கொள்கலன்களில் உள்ள பட்டியலை மத்திய வங்கிக்கு அனுப்பி தேவையான பரிந்துரைகளைப் பெற்ற பின்னர் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் கூறினார்.

இதனை அடுத்து சீனி, பருப்பு, அரிசி மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களுடன் காணப்படும் கொள்கலன்கள் விடுவிக்கப்படும் என அவர் கூறினார்.

அதேநேரம் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படாது என்றும் அமைச்சர் பந்துல குணவர்தன உறுதியளித்தார்.

# எரிவாயு கிடைக்கப்பெற்றதையடுத்து மீண்டும் கொவிட் சடலங்கள் தகனம்

## வவுனியா நகரசபை தவிசாளர் அறிவிப்பு

வவுனியா நகரசபையின் பூந்தோட்டம் மயானத்திற்கு எரிவாயு கிடைக்கப் பெற்றதையடுத்து மீண்டும் கொவிட் சடலங்களைத் தகனம்செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக நகரசபை தவிசாளர் இ. கௌதமன் தெரிவித்துள்ளார்.

கொவிட் சடலங்கள் தகனம் செய்வது தொடர்பில் இன்று அவர் கருத்து தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வவுனியா நகரசபைக்குச் சொந்தமான பூந்தோட்டம் மின் மயானத்தில் கொவிட் தொற்றால் மரணிப்பவர்களின் உடலங்கள் தகனம் செய்யப்பட்டு வந்தன. எரிவாயு தட்டுப்பாடு நிலவும் நிலையில் மின் மயானத்தில் எரிவாயு முடிந்தமையால் கடந்த சில நாள்களாக மின் மயானத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது.

இதனால் கொவிட் தொற்று காரணமாக மரணமடைந்த சிலரது உடல்கள் தகனம் செய்ய முடியாது திருப்பி அனுப்பப்பட்டன. இந்நிலை தொடர்பில் சுகாதாரப் பிரிவினர்,



மாவட்ட அரச அதிபர் ஆகியோருக்கும் தெரியப்படுத்தியிருந்தோம்.

வவுனியா மாவட்ட அரச அதிபரால் மின் மயானத்துக்கு நான்கு எரிவாயு சிலிண்டர்கள் பெற்றுத் தரப்பட்டுள்ளன. இதனால் மீண்டும் கொவிட் சடலங்களைத் தகனம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே, கொவிட் தொற்று காரணமாக மரணிப்பவர்களின் சடலங்களை வழமை போன்று தொடர்ந்தும் வவுனியா நகரசபையின் பூந்தோட்டம் மின் மயானத்தில் தகனம் செய்யமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பேச்சுக்கு முன் தடைகளை நீக்குமாறு ஈரான் வலியுறுத்து!



அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பான பேச்சு வியன்னாவில் இந்தவாரம் மீண்டும் தொடங்கவுள்ள நிலையில் தங்கள் நாட்டின் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடைகளை அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் நீக்க வேண்டும் என ஈரான் வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்வதற்கு அனுமதிப்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் ஈரான் கோரியுள்ளது.

பொருளாதாரத் தடையால் எங்கள் நாட்டின் எண்ணெய் தொழில் பாதிக்கப்பட்டுள்ளது. ஈரானின் கச்சா எண்ணெய் தடையின்றி விற்பனை செய்யப்பட வேண்டும். அணுசக்தி ஒப்பந்தப் பேச்சுக்களின் அடுத்த கட்டமாக எங்கள் மீதான பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட வேண்டும் என தெஹ்ரானில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹூசைன் அமிரப்துல்லாஹியன் தெரிவித்தார்.

ஈரானின் அணுசக்தி திட்டங்கள் மீதான தடைக்குப் பதிலாக பொருளாதாரத் தடைகளை விலக்கிக் கொள்ள வகை செய்யும் ஒப்பந்தம் ஈரானுக்கும் அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுக்கும் இடையே 2015 ஆம் ஆண்டு கையொப்பமானது.

ஆனால், அந்த ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்கா வெளியேறுவதாக கடந்த 2018 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார். மேலும், ஈரான் கச்சா எண்ணெய் விற்பனை செய்வதற்குத் தடை விதிப்பது உள்ளிட்ட பொருளாதாரத் தடைகளையும் விதித்தார். இந்தத் தடையைத் தொடர்ந்து, ஈரானிடமிருந்து கச்சா எண்ணெய் பெறும் ஒப்பந்தத்தை சர்வதேச எண்ணெய் நிறுவனங்கள் ரத்து செய்தன. இதனால் அந்த நாட்டின் பொருளாதாரம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது.

இந்நிலையில் ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் உள்ள அம்சங்களை நடைமுறைப்படுத்தும் வகையில் பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் மீண்டும் பேச்சைத் தொடங்கியுள்ளன.

ஆஸ்திரிய தலைநகர் வியன்னாவில் இந்த மாத ஆரம்பத்தில் பேச்சு தொடங்கிய நிலையில், புதிய கோரிக்கைகளை ஈரான் எழுப்பியதால் ஒத்திவைக்கப்பட்டது. இப்போது மீண்டும் பேச்சு தொடங்கவுள்ள நிலையில் தங்கள் மீதான பொருளாதாரத் தடைகளை நீக்க வேண்டும் என ஈரான் வலியுறுத்தியுள்ளது.





| மணமகள் விவரம் | மணமகன் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 02.06.1993 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - விருச்சிகம்<br>கி.பா - 69 செவ் - 9 இல்<br>தகைமை - Civil Eng. தொழில் - Company work<br>எதிர்பார்ப்பு - அரசசேவை தனியார் மணமகன் | பிறந்த திகதி - 13.05.1993 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 2<br>கி.பா - 37 செவ் 8 இல்<br>தகைமை - BSc Soft ware Eng. தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - Soft ware Eng. காரைநகர் முன்னுரிமை |
| பிறந்த திகதி - 14.05.1994 மதம் - இந்து<br>ஜாதி -K பகுதி நட்சத்திரம் - மிருகசீரிடம்<br>கி.பா - 42 செவ் 12 இல்<br>தகைமை - BA தொழில் - தேடல்<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன் | பிறந்த திகதி - 11.03.1995 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை<br>கி.பா - 71 செவ் 1 இல்<br>தகைமை - IT Eng. தொழில் - அரச சேவை<br>எதிர்பார்ப்பு - விஞ்ஞான பட்டதாரி மணமகள் |
| பிறந்த திகதி - 10.03.1989 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - அச்சுவினி 3<br>கி.பா - 32 செவ் 7இல்<br>தகைமை - BSc, MSc தொழில் - ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன் 5'7" | பிறந்த திகதி -26.07.1983 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - அவிட்டம் 1<br>கி.பா - 37 செவ் 7 இல்<br>தகைமை - GCE A/L தொழில் - அரச சேவை<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் (வடமராட்சி முன்னுரிமை)" |
| பிறந்த திகதி - 05.04.1994 மதம் - இந்து<br>ஜாதி -V பெண் நட்சத்திரம் - திருவோணம்<br>கி.பா - 13 செவ் 9 இல்<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor மணமகன் தேவை | பிறந்த திகதி - 30.10.1990 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பூரட்டாதி 3<br>கி.பா - 26 செவ் 3 இல்<br>தகைமை - BBA தொழில் - Bank Officer<br>எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 19.02.1996 மதம் - இந்து<br>ஜாதி -K பெண் நட்சத்திரம் - சதயம்<br>கி.பா - 90 செவ் / சூரி 7 இல்<br>தகைமை - பட்டதாரி UK தொழில் - UK, PR<br>எதிர்பார்ப்பு - UK மணமகன் சேவை | பிறந்த திகதி - 23.12.1977 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - ரோகினி 2<br>கி.பா - 13 செவ் 4 இல்<br>தகைமை - GCE A/L தொழில் -ICT Solutions<br>எதிர்பார்ப்பு - A/L படித்த மணமகள் |
| பிறந்த திகதி - 01.04.1988 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - உத்தரம் 2<br>கி.பா - 15 செவ் 9 இல்<br>தகைமை - BCom தொழில் - அரசசேவை<br>எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன் | பிறந்த திகதி - 21.11.1986 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - புனர்பூசம் 4<br>கி.பா - 50 செவ் 8 இல்<br>தகைமை - GEC A/L Computer தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - அரச சேவை தனியார் மணமகள் |
| பிறந்த திகதி - 28.08.1992 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - மகம்<br>கி.பா - 18 செவ் 7 இல்<br>தகைமை - BSc IT தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - UK, Australia, இலங்கை மணமகன் | பிறந்த திகதி - 13.06.1979 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - உத்தராடம் 2<br>கி.பா - 52 செவ் 10 இல்<br>தகைமை - MBA தொழில் - Company<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள் |
| பிறந்த திகதி - 12.11.1989 மதம் - இந்து<br>ஜாதி V பெண் நட்சத்திரம் - பரணி 5'2"<br>கி.பா - 20 செவ் / சூரி இல் -<br>தகைமை - MBBS தொழில் - Doctor<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng., உள்நாடு, வெளிநாடு (வெளிநாடு முக்கியம்) | பிறந்த திகதி - 31.01.1993 மதம் - இந்து<br>ஜாதி -V ஆண் நட்சத்திரம் - பரணி<br>கி.பா - 32 செவ் 6 இல்<br>தகைமை - BSc Civil Eng. தொழில் - Singapore<br>எதிர்பார்ப்பு - Doctor, Eng., Accountant மணமகள் |

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzelan- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.


### ஆஸ்திரேலியாவில்

# தோன்றியது நடக்கும் மீன்!




ஆஸ்திரேலியாவில் சுமார் 22 ஆண்டுகளுக்கு பிறகு, பிங் கான்ட் பிஷ் ( pink hand fish) எனப்படும் துடுப்புகளை பயன்படுத்தி நடக்கும் திறன்கொண்ட மீன் மீண்டும் தென்பட்டுள்ளது.

கடைசியாக கடந்த 1999ஆம் ஆண்டு தென்பட்ட இந்த அரிய வகை மீன், கடந்த சில தினங்களுக்கு முன்னர் டாஸ்மானியா தீவின் கடற்கரையில் தென்பட்டதாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். ஒரு காலத்தில் அதிகளவில் இருந்த இந்த மீன்கள் தற்பொது பெருமளவு குறைந்துவிட்டன எனவும் கடந்த 2012ஆம் ஆண்டு அழிந்து வரும் உயிரினங்களில் பட்டியலில் சேர்க்கப்பட்டன எனவும் காமன் வெல்த் அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த மீன்களின் சிறப்பு என்னவென்றால், அவற்றின் உடலின் ஒவ்வொரு பக்கத்திலும் துடுப்புகள் போன்ற சிறிய கைகள் இருக்கும். அந்த துடுப்புகளை மீன்கள் நடக்க பயன்படுத்தும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

### ஈரானில் இருந்து

# ஏமன் சென்ற ஆயுதங்களை கைப்பற்றியது அமெரிக்கா



அமெரிக்க கடற்படையின் 5 ஆவது படையணி வடக்கு அரேபிய கடல் பகுதியில் ஈரானில் இருந்து ஏமன் நோக்கி சென்ற ஏராளமான ஆயுதங்களை கைப்பற்றி உள்ளது.

அமெரிக்க கடற்படையின் ரோந்து கலன்களான டெம்பெஸ்ட் மற்றும் டைபூன் ஆகியவை ஏவுகணை நாசகாரி கப்பலுடன் இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டன. இந்த நடவடிக்கையில் ஏமனில் ஹூத்தி கிளர்ச்சியாளர்களுக்காக கொண்டு செல்லப்பட்ட 1400 ஏகே-47 ரக துப்பாக்கிகள் மற்றும் 2 லட்சம் ரவுண்டு தோட்டாக்கள் ஆகியவை கைப்பற்றப்பட்டன.

இவற்றை கொண்டு சென்ற படகில் இருந்த ஐந்து பேரும் கைது செய்யப்பட்ட பின்னர் அவர்களின் படகை அமெரிக்கடற்படையினர் மூழ்கடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அன்னை தெரசா தொண்டு நிறுவன வங்கிக்கணக்குகள் முடக்கப்பட்டனவா என இந்திய மத்திய அரசு விளக்கம்

இந்தியாவில் செயல்பட்டுவருகின்ற அன்னை தெரசா தொண்டு நிறுவனங்களின் வங்கிக் கணக்குகளை இந்திய மத்திய அரசு முடக்கியுள்ளதாக மேற்குவங்காள முதலமைச்சரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக மம்தா தனது டுவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியாவில் செயல்பட்டுவரும் அன்னை தெரசாவின் தொண்டு நிறுவனங்களின் அனைத்து வங்கிக் கணக்குகளையும் இந்திய மத்திய அரசு முடக்கியுள்ளது என்பதை கிறிஸ்மஸ் தினத்தன்று அறிய நேர்ந்தமைமிகவும்அதிர்ச்சியாகஇருந்தது. 22,000 நோயாளிகளும் ஊழியர்களும் உணவு மற்றும் மருந்துப்பொருள்கள் இன்றி தவிக்கவிடப்பட்டுள்ளனர். சட்டம் மிக முக்கியமானது என்றாலும், மனிதாபிமான முயற்சிகளில் சமரசம் செய்யக்கூடாது, எனத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், இந்தியாவில் செயல்பட்டுவரும் அன்னை தெரசா தொண்டு நிறுவனத்தின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளனவா? என்பது குறித்து இந்திய மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.


IMAGE : PTI

இது தொடர்பாக இந்திய மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், அன்னை தெரசாவால் நிறுவப்பட்ட எந்த ஒரு தொண்டு நிறுவனத்தின் கணக்குகளையும் இந்திய மத்திய அரசு முடக்கவில்லை. அதேவேளை தங்கள் நிறுவனத்தின் வங்கிக் கணக்குகளை முடக்கும்படி அந்தத் தொண்டு நிறுவனமே ஸ்டேட் பாங் ஒவ் இந்திய வங்கியிடம் கேட்டுக்கொண்டதாக அந்த வங்கி அரசிடம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்கு முறைச் சட்டத்தின் கீழ் அன்னை தெரசா தொண்டு நிறுவனத்தின் பதிவை நீடிப்பதற்கான விண்ணப்பம் 2021 டிசெம்பர் 25 ஆம் திகதி நிராகரிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டம் மற்றும் வெளிநாட்டுப் பங்களிப்பு ஒழுங்குமுறை விதிகளின் தகுதி நிபந்தனைகளை அந்தத் தொண்டு நிறுவனம் பேணவில்லை. இதனாலேயே அந்தத் தொண்டு நிறுவனத்தின் பதிவு புதுப்பித்தல் விண்ணபம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

அன்னை தெரசா தொண்டு நிறுவனத்தின் பதிவு ஒக்ரோபர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்துவிட்டது. ஆனால், பிற தொண்டு நிறுவனங்களைப் போல இந்தத் தொண்டு நிறுவனத்தின் புதுப்பித்தல் விண்ணப்பமும் நிலுவையில் இருந்ததால், அந்த நிறுவனத்தின் பதிவுரிமம் 31 டிசெம்பர் 2021 வரை நீடிக்கப்பட்டிருந்தது. ஆனால், அந்தத் தொண்டு நிறுவனம் எதிர்மறைச் செயல்களில் ஈடுபட்டதால் அதன் புதுப்பித்தல் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது, என இந்திய மத்திய அரசு விளக்கம் அளித்துள்ளது.



## சிறையிலிருந்து வெளியே வந்தார் நளினி பல நிபந்தனைகளுடன் விடுவிப்பு

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வேலூர் சிறையிலிருந்த நளினி, ஒரு மாத சிறை விடுப்பில் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

தாய்பத்மாவின் உடல்நிலையைக் கவனிப்பதற்காக நளினிக்கு 30 நாள்கள்சிறைவிடுப்புஅளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் அவர் சிறையிலிருந்து வெளியே வந்தார். காட்பாடியை அடுத்த பிரம்மபுரம் பகுதியில் உள்ள தாய் பத்மாவின் வீட்டில் நளினி தங்கியுள்ளமையால், அங்கு சுழற்சி முறையில் 50 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

ஊடகங்களுக்குப் பேட்டி அளிக்கக்கூடாது, பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக்கூடாது, அரசியல் பிரமுகர்களைச் சந்திக்கக்கூடாது என நளினிக்கு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. வெளியாள்களைச் சந்திக்கவும் நளினிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தினமும் நளினி கையெழுத்திடுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஐந்தாவது முறையாக, சிறை விடுப்பில் நளினி வெளியே வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சென்னை ராஜீவ்காந்தி மருத்துவமனையில் 42 பேருக்கு ஒமிக்ரோன் தொற்று அறிகுறி

சென்னை ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனையில் கடந்த 17 ஆம் திகதி சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்ட ஒருவருக்கு கொரோனாப் பாதிப்பு இருப்பது பின்னர் உறுதி செய்யப்பட்டது.




இதைத் தொடர்ந்து அந்த விடுதியில் பணியில் இருந்த மருத்துவர்கள், தாதிகள், பயிற்சி மருத்துவர்கள், மாணவ தாதியர், ஊழியர்கள், அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் என கடந்த 17 ஆம் திகதி முதல் 24ஆம்திகதிபணியிலிருந்தமூவாயிரத்து 370பேருக்குகொரோனாப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதில் 39 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது இந்த எண்ணிக்கை 60 ஆக அதிகரித்துள்ளதோடு, அவர்களில் 42 பேருக்கு ஒமிக்ரோன் அறிகுறியும் இனங்காணப்பட்டுள்ளது.

இதையடுத்து இந்த 42 பேரின் சளி மற்றும் இரத்த மாதிரிகள் பரிசோதனைக்காக புனே மற்றும் ஹைதரபாத்தில் உள்ள ஆய்வகங்களுக்கு மரபணுப் பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

## சண்டிகார் மாநகராட்சித் தேர்தலில் அதிக இடங்களில் ஆம் ஆத்மி வெற்றி

பஞ்சாப் - ஹரியாணா மாநிலங்களின் பொதுத் தலைநகரும், யூனியன் பிரதேசமுமான சண்டிகாரில் மாநகராட்சி தேர்தல் நடைபெற்று, பதிவான வாக்குகள் நேற்று எண்ணப்பட்டன.




இதில் மொத்தமுள்ள 35 இடங்களில் ஆம் ஆத்மி கட்சி 14 இடங்களில்வெற்றி பெற்றுள்ளது. தற்போது மாநகராட்சியை கையில் வைத்துள்ள பா.ஜ.க. 12 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. காங்கிரஸ் 8 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. அகாலி தளம் ஓரிடத்தில் வென்றுள்ளது. பா.ஜ.க. சார்பில் தற்போது மேயராக உள்ள ரவி காந்த் சர்மா இந்தத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வேட்பாளரிடம் தோல்வியடைந்துள்ளார்.

சண்டிகார்மாநகராட்சித்தேர்தலில் அதிக இடங்களில் வெற்றிபெற்றமை குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஆம் ஆத்மிகட்சியின்ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால், சண்டிகார் மாநகராட்சி தேர்தலில் ஆம் ஆத்மி பெற்ற வெற்றி, பஞ்சாப் தேர்தல் வெற்றியின் முன்னோட்டம், என்று குறிப்பிட்டுள்ளார்.

## மகாத்மா காந்தி குறித்து அவதூறு மத குருவின் மீது வழக்குப்பதிவு

சத்தீஸ்கர் மாநிலத்தின் ராய்ப்பூர் நகரில் நடைபெற்ற மத ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் மகாராஷ்டிராவைச் சேர்ந்த காளிச்சரண் மகராஜ்என்ற துறவி பேசிய பேச்சு சர்ச்சைக்குள்ளானது. மகாத்மா காந்தியை கொன்ற நாதுராம் கோட்சேவுக்குத் தலை வணங்குகிறேன் என்று கூறிய அவர், முஸ்லிம் மதம் குறித்தும் கடுமையான சொற்களால் அவதூறு பேசினார் எனவும் குற்றச்சாட்டு எழுந்தது. இதையடுத்து, மகாத்மா காந்தியை அவதூறாகப் பேசியமை, இரு மதங்களுக்குஇடையேபதற்றத்தைஉருவாக்கும் வகையில் பேசியமை போன்ற குற்றச்சாட்டுகளை முன்வைத்து பொலிஸாரிடம் காங்கிரஸ் நிர்வாகி பிரமோத் துபே என்பவர் புகார்செய்திருந்தார். இந்தப்புகாரையடுத்து, காளிச்சரண் மீது திக்ராபாரா பொலிஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.



மகாத்மா காந்தி குறித்த காளிச்சரணின் கருத்துக்கு காங்கிரஸ் எம்.பி.ராகுல் காந்தியும் தன்னுடைய எண்ணத்தை வெளியிட்டுள்ளார். 'நீங்கள் என்னைச் சங்கிலியால் பிணைக்கலாம்.

என்னைச் சித்திரவதை செய்யலாம். இந்த உடலை அழிக்கலாம். ஆனால், என் எண்ணங்களை நீங்கள் சிறையில் அடைக்க முடியாது,' என்று மகாத்மா காந்தியின் வார்த்தைகளை மேற்கோள் காட்டி ராகுல் காந்திடுவிட்டரில்பதிவிட்டுள்ளார்.

# திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலை இடமாற்றம் தொடர்பில் கவனம் செலுத்த முடிவு




திருகோணமலை மாவட்ட பொது வைத்தியசாலையில் நிலவும் கடும் நெருக்கடி காரணமாக அந்த வைத்தியசாலையை வேறு இடத்தில் அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, வைத்தியசாலையை சத்தாபுர பிரதேசத்திற்கு மாற்றுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வைத்தியசாலை வளாகத்தில் போதிய வசதி இல்லாமையினாலும், கடல் எல்லையில் அமைந்திருப்பதாலும் பல பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

இதுதொடர்பான விசேட கலந்துரையாடல் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தலைமையில் அந்த அமைச்சில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது, நிர்மாணப்பணிகளை 3 கட்டடங்களின் கீழ் விரைவில் ஆரம்பிக்குமாறு அமைச்சர், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

தற்போதைய நிலைமையில் அங்கு மேலும் கட்டடங்களை அமைப்பதற்கு போதிய வசதிகள் இல்லை என தெரியவந்துள்ளது. இந்த வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக ஜெய்கா செயற்றிட்டத்தின் கீழ் 22 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கல்முனை மாநகர சபையின் புதிய உறுப்பினர் தெரிவானார்



கல்முனை மாநகர சபையின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய உறுப்பினராக வர்த்தகரும் சமூக சேவையாளருமான எம்.ஜ.எம். றஜப்தீன் நேற்று திங்கட்கிழமை தனது சத்தியப்பிரமாண பத்திரத்தை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப்பிடம் கையளித்து, உறுப்பினர் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

மாநகர முதல்வர் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர ஆணையாளர் எம்.சி.அன்சார், மாநகர சபை உறுப்பினர்களான ஹென்றி மகேந்திரன், ரி.ராஜரட்ணம், சபைச் செயலாளர் ஏ.எம்.ஆரிப், மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.ஜீ.எம்.நதீர், அக்கட் சியின் தலைமைத்துவ சபை உறுப்பினர் எம்.ஐ.எம்.மஸீன் உள்ளிட்ட பிரமுகர்கள் பங்கேற்றிருந்தனர். கல்முனை மாநகர சபையின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் உறுப்பினராக பதவி வகித்து வந்த சட்டத்தரணி என்.ஏ.எம். அஸாம் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே மருதமுனையைச் சேர்ந்த எம்.ஐ.எம்.றஜப்தீன் அக்கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஆயுர்வேத மத்திய மருந்தகத்திற்கு அலுவலகப் பொருள்கள் அன்பளிப்பு



கொழும்பு - திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள நாவலடி ஆயுர்வேத மத்திய மருந்தகத்தின் நீண்ட நாள் தேவையாகக் காணப்பட்ட அலுவலகத்தில் இருந்த தளபாட பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

கட்டார் நாட்டிலில் இருந்து பல்வேறு உதவிகளை செய்து வரும் தனவந்தர் ரமீஸ் இந்த மத்திய மருந்தகத்தின் பொறுப்பதிகாரி வைத்தியர் எம்.றிக்காஷ் அவர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக நேற்று மத்திய மருந்தகத்தில் காலை 10.30 மணிக்கு அலுவலகப் பொருள்களை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் நான், ரமீஸ் நானா, அமைப்பின் செயலாளர் சாஜகான் மற்றும் ஓட்டமாவடி ஹிஜ்ரா வித்தியாலய அதிபர் சாபீர் மற்றும் ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் சுபைதீன் மற்றும் அவ்வமைப்பின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக வைத்திய பொறுப்பதிகாரி எம்.ரிக்காஷ் அவர்களிடம் பொருள்களை கையளித்தனர்.



### பொலிஸ் உத்தியோகத்தர்

## அழகரெத்தினம் நவீனனின் பூதவுடல் நேற்று நல்லடக்கம்

திருக்கோவில் பொலிஸ் நிலையத்தாக்குதலில் உயிரிழந்த பாண்டிருப்பைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் அழகரெத்தினம் நவீனனின் (வயது-30) பூதவுடல் நேற்று 11 மணியளவில் பொலிஸ் மரியாதை அணிவகுப்புடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

முன்னதாக, அம்பாறை வைத்தியசாலையிலிருந்து பொலிஸாரினால் கொண்டுவரப்பட்ட நவீனனின் பூதவுடல் ஞாயிறு இரவு 10.30 மணியளவில் காரைதீவு, விபுலாநந்தா சதுக்கத்திலிருந்து கல்முனை, பாண்டிருப்பு இளைஞர்கள் சகிதம் அவரது வீட்டிற்கு கொண்டுவரப்பட்டு அஞ்சலிக்காக வீட்டில் வைக்கப்பட்டிருந்தது. நேற்று காலை 10.15 மணியளவில் பொலிஸ் மரியாதை அணிவகுப்புடன் பூதவுடல் பாண்டிருப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. இதன்போது பெருந்திரளான இளைஞர்கள் பொதுமக்கள் கதறியழுதபடி பங்கேற்றதைக் காணமுடிந்தது. பூதவுடலை பொலிஸ் கட்டளைச்சட்டத்தின்படி முறைப்படி அவர்களே தாங்கி வந்து, பாண்டிருப்பு இந்து மயானத்தில் பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை நல்லடக்கம் இடம்பெற்றது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஆஷஷ் மூன்றாவது போட்டியிலும் வெற்றி கிண்ணத்தைத் தக்கவைத்தது ஆஸ்திரேலியா!



ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஷ் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, 3-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றதோடு வெற்றிக் கிண்ணத்தையும் தக்கவைத்துக்கொண்டது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி, முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இங்கிலாந்து அணி, 65.1ஓவர்களிலேயே அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அணித்தலைவர் ஜோ ரூட் 50 ஓட்டங்களையும்,ஜொனிபெயர்ஸ்டோ35ஓட்டங்களையும் எடுத்தனர். ஆஸ்திரேலிய அணியின் பட் கம்மின்ஸ், லயொன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் மிட்ச்செல் ஸ்ட்ராக் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

அதையடுத்து தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணி 267 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. மார்கஸ் ஹரிஸ் 76 ஓட்டங்களையும் டேவிட் வோனர் 38 ஓட்டங்களையும் எடுத்தனர். இங்கிலாந்து அணியின் ஜேம்ஸ் அன்டர்சன் 4 விக்கெட்டுக்களையும் ஒலி ரொபின்சன், மார்க் வூட் இருவரும் தலா இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

82 ஓட்டங்கள் பின்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 68 ஓட்டங்களை மட்டுமே பெற்ற நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து இன்னிங்ஸ் மற்றும் 14 ஓட்டங்களால் பரிதாபகரமாகத் தோற்றது. அணித்தலைவர் ஜோ ரூட் 28 ஓட்டங்களை எடுத்திருந்தார். இந்தப் போட்டியில் தனது டெஸ்ட் அறிமுகத்தை மேற்கொண்ட ஆஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் ஸ்கொட் போலன்ட் 4 ஓவர்கள் பந்துவீசி, 7 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார். மிட்ச்செல் ஸ்ட்ராக், 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராக ஸ்கொட் போலன்ட் தெரிவானார். தொடரில் இரு போட்டிகள் எஞ்சியிருக்கும் நிலையிலேயே 3 - 0 என்று முன்னிலை பெற்றிருக்கும் ஆஸ்திரேலிய அணி ஆஷஷ் கிண்ணத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

2017-18 தொடரில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலிய அணி ஆஷஷ் கிண்ணத்தைத் தன்வசப்படுத்தியிருந்தது, 2019 இல் நடைபெற்ற தொடர் சமநிலையில் முடிவடைய தொடர்ந்தும் ஆஷஷ் கிண்ணம் ஆஸ்திரேலியா வசமே இருந்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜூனியர் ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் அரையிறுதியில்

ஜூனியர் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றுவருகிறது. இதில் நேற்று நடந்த போட்டியில் இந்தியா-ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. இந்தப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 259 ஓட்டங்களை எடுத்தது. அந்த அணியின் இஜாஸ் அகமட் ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களையும், சுலைமான் சாபி 73 ஓட்டங்களையும் எடுத்தனர். இந்திய அணியின் ராஜ்வர்தன், கௌஸ் தாம்பே , விக்கி மற்றும் ராஜ் பாவா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இதையடுத்து, 260 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி, 48.2 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கையடைந்து வெற்றி பெற்றது. ஹர்னூர் சிங் 65 ஓட்டங்களையும், ராஜ் பாவா ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆப்கானிஸ்தான் அணியின் நூர் அஹமட் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

இந்தப் போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

மற்றொரு போட்டியில் பாகிஸ்தான் அணி ஐக்கிய அரபு இராச்சிய அணியை 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி அரையிறுதிக்குள் நுழைந்துள்ளது.



# பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் ஒன்பது இலங்கை வீரர்கள் இணைப்பு

பங்களாதேஷ் பிறீமியர் லீக் (பி.பி.எல்.) தொடரில் வீரர்கள் ஏலம் நடைபெற்று முடிந்திருக்கும் நிலையில் அதில் இதுவரை இலங்கையினைச் சேர்ந்த 9 வீரர்கள் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றனர். 2022ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 21ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வரை பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடர் நடைபெறவிருக்கின்றது. இந்தத் தொடருக்கான வீரர்கள் ஏலம் நேற்று டாக்காவில் நடைபெற்ற போதே இலங்கை வீரர்களும் தொடரில் பங்கெடுக்கும் வெவ்வேறு அணிகளால் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

தனுஷ்க குணதிலக்க போர்ச்சூன் பரிசல் அணியினால் வாங்கப்பட்டிருக்கின்றார். பானுக்க ராஜபக்ஷ, சீக்குகே பிரசன்ன ஆகியோரை குல்னா டைகர்ஸ் அணி ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. குசல் மெண்டிஸ் குமிலா விக்டோரியன்ஸ் அணியாலும், இசுரு உதான டாக்கா அணியாலும் உள்வாங்கப்பட்டுள்ளனர். தினேஷ் சந்திமால் மற்றும் அஞ்சலோ பெரேரா ஆகியோர் இந்தத் தொடரில் சில்ஹெட் அணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கின்றர். இதேநேரம் வனிந்து ஹஸரங்கவும் டாக்கா அணியால் தெரிவுசெய்யப்பட்டிருந்தாலும் அவர் தொடரிலிருந்து விலகியிருக்கிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.





# தென்னாபிரிக்காவுடனான முதல் டெஸ்ட் 327 ஓட்டங்களை குவித்தது இந்திய அணி

இந்தியா-தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிகள் விளையாடி வருகின்ற முதலாவது டெஸ்ட் போட்டியின் நேற்றைய இரண்டாவது நாள் ஆட்டம் மழையின் காரணமாக முழுமையாகக் கைவிடப்பட்டது.

இன்று போட்டி ஆரம்பமானதும் அடுத்தடுத்து விக்கெட்டுக்களை இழந்த இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 327 ஓட்டங்களை எடுத்தது. கே.எல்.ராகுல் 123 ஓட்டங்களையும், மயாங்க் அகர்வால் 60, ரகானே 48 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் லுங்கி இங்கிடி 6 விக்கெட்டுக்களையும், ரபாடா 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

அடுத்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த தென்னாபிரிக்க அணி மதியபோச இடைவேளை வரை ஒரு விக்கெட்டை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ்த்தேசிய அரசியலின் சரியான செல்திசைக்கு வலுவான சிவில் சமூகக் கட்டமைப்பு அவசியம்!

## பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு



ஈழத்தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் மீண்டும் ஒருமுறை சர்வதேசம் அவர்களைக் கையாள ஆரம்பித்திருக்கிறது. ஜனாதிபதியாக ஜெ.ஆர்.ஜெயவர்த்தனா இருந்தபோது இலங்கையின் கதவுகளைஅமெரிக்காவுக்கு அகலத் திறந்துவிட்டிருந்தார். அப்போது, அமெரிக்கப் பிரசன்னத்தை இலங்கையில் தவிர்ப்பதற்காக இந்தியா ஈழத்தமிழர்களைக் கையாண்டிருந்தது. இயக்கங்களுக்குஆயுதப்பயிற்சியளித்துஇலங்கையைத் தன் வழிக்குக் கொண்டுவந்திருந்தது. இப்போது, ராஜபக்ஷஅரசாங்கம் இலங்கையைச் சீனாவுக்குத் திறந்துவிட்டுள்ள நிலையில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து இலங்கையைப் பணியவைக்கும் முயற்சியில் தமிழ்க்கட்சிகளைக் கையாளத்தொடங்கியுள்ளன.

இந்நிலையில், தமிழ்த்தேசிய அரசியலைச் சரியான செல்திசைக்கு நகர்த்துவதற்கு வலுவானதொரு சிவில் சமூகக் கட்டமைப்பைஉருவாக்குவது அவசியமாகும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சமகால அரசியல் அரங்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இளங்கலைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. இந்த அரங்குக்குத் தலைமை வகித்து உரையாற்றும் போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் –

இந்தியாவும், அமெரிக்காவும், சீனாவும் தமிழ்க் கட்சிகளைக் கையாளத் தொடங்கியிருக்கும் சூழ்நிலையில் இந்தக் கட்சிகள் இராஜதந்திர ரீதியாக இந்நாடுகளைக் கையாளுவதில் தொடர்ந்தும் தவறிழைத்து வருகின்றன. தனித்தனிக் கட்சிகளாக ஏனைய கட்சிகளுக்கு எதுவும் தெரியாமலும், ஒரு கட்சிக்குள்ளேயே தனிநபர்களாக ஏனைய உறுப்பினர்களுக்குத் தெரியாமலும் இந்நாடுகளுடன் பேச்சுகள் இடம்பெறுகின்றன. இந்த விடயங்களை மக்களுக்குப் பகிரங்கப்படுத்துவது இராஜதந்திரமாக ஆகாது என்று கூறி வருகின்றனர்.

மைத்திரி – ரணில் கூட்டை உருவாக்கியபோதும் தமிழ் மக்களின் நலன் தொடர்பாகப் பேசப்பட்டதென்றும் அதனை வெளிப்படையாகப் பேசுவது இராஜதந்திரம் அல்ல என்றும் கூறியிருந்தனர். தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் பொறுப்பைத் தனிக் கட்சிகளிடமும் தனிநபர்களிடமும் இவ்வாறு விட்டுவிடுவது மிகவும் ஆபத்தானது.

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின்படி 13 ஆவது திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் கூறுவதற்காகப் பல தமிழ்த் தேசியக் கட்சிகள் கூட்டுச்சேர்ந்துள்ளன.

இந்தக் கட்சிகளின் கூட்டில் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளும் இப்போது புதிதாக இணைக்கப்பட்டுள்ளன. இவை வடக்குக் கிழக்கு இணைப்பை ஒருபோதும் ஆதரித்தவை அல்ல.தொடர்ந்தும் எதிரான நிலைப்பாட்டையே வெளிப்படுத்தி வருகின்றன. இந்நிலையில் முஸ்லிம் கட்சிகளை இணைத்துக்கொண்டமை ஏற்கனவே பலவீனமாகவுள்ள 13 ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் பலவீனப்படுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சி நிரலோ என்றே எண்ணத்தோன்றுகிறது.

அவ்வாறுதான் அது அமையவும் போகின்றது.

கூட்டுக்கட்சிக்குள்ளே கட்சிகளாகவும், கட்சிகளுக்குள்ளே தனித்தனித் தலைவர்களாகவும் பிரிந்து நிற்பது ஈழத்தமிழர்களைக் கையாளுவதற்குச் சர்வதேசத்துக்கு இலகுவானதாக இருக்கும். ஆனால், ஈழத்தமிழ் இனத்துக்கு மிகவும் ஆபத்தானது. இந்நிலையிலேயே தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்டு கட்சிகளை ஒருங்கிணைக்கவும், சர்வதேசங்களைத் தமிழ்த் தரப்புக் கையாளுவதற்கான நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கும் சிவில் சமூகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்தச் சிவில் சமூக அமைப்பு கடந்த காலத்தில் கட்டப்பட்ட சிவில் சமூக அமைப்புகளின் தோல்விகளைக் கருத்திற் கொண்டு அரசியல் கட்சிகளின் பினாமிகளாக அல்லாமலும் இவ்வமைப்பின் மூலம் கிடைக்கும் வெளிச்சத்தைப் பயன்படுத்தித் தனிப்பட்ட அரசியல் ஆதாயம் தேடுவனவாக அல்லாமலும் இருக்க வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

# பொலிஸ் காவலரண் முறிகண்டியில் திறப்பு!








முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான முறிகண்டி பிரதேசத்தில் புதிய பொலிஸ் காவலரண் நேற்று (திங்கட்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

குறித்த பிரதேசத்தின் பாதுகாப்பு மற்றும் பொது மக்கள் சேவையை விஸ்தரிக்கும் வகையிலும், குற்ற செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையிலும் புதிய காவல் அரண் திறந்து வைக்கப்பட்டது.

நாடு முழுவதும் புதிய பொலிஸ் நிலையங்களை அமைக்கும் சுபீட்சத்தை நோக்கி எனும் ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாறு பொலிஸ் நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மேற்படி பொலிஸ் நிலையம் இந்துபுரம் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள செல்வபுரம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் தலைமை பொலிஸ் நிலையத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள குறித்த பொலிஸ் நிலையத்தின் ஊடாக பல்வேறுபட்ட முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவுள்ளதுடன், நீதிமன்ற நடவடிக்கைக்குட்படாத அனைத்துவிசாரணைகளும், சேவைகளும் வழங்கப்படவுள்ளன என மாங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பொலிஸ் காவலரணை வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஜெகத் பலிகக்கார திறந்து வைத்தார். இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கலும் திலகரட்ண, மாங்குளம் தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிரிந்த உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டமையுடன், சந்தன என்ற பொலிஸ் சார்ஜன் குறித்த காவலரணுக்கு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதேவேளை, இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தம் வகையிலும், குற்ற செயல்களை கட்டுப்படுத்தும் வகையிலும் சுற்றுகாவல்நடவடிக்கையும்முன்னெடுக்கப்படவுள்ளது. பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டமை தொடர்பில் மக்கள் வரவேற்றுள்ளனர். இதுவரை காலமும் இந்தப் பகுதி மக்கள் பல்வேறுபட்ட முறைப்பாடுகளுக்காக மாங்குளம் பொலிஸ் நிலையத்துக்கு செல்வதற்காக 25 கிலோ மீற்றர்வரை பயணிக்க வேண்டி ஏற்பட்டதுடன், அதிக நேரத்தையும், செலவினையும் எதிர்கொண்டனர்.

இந்த பொலிஸ் நிலையம் அமைக் கப்பட்ட நிலையில் சாதாரணமாக தீர்த்துக்கொள்ளக்கூடிய பிரச்சினைகளை உடன் தீர்த்துக்கொள்ள முடியும் என்பதுடன். ஏனைய சேவைகளுக்கு வசதியாகவும் அமையும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பொலிஸ் காவலரண் அமைக்கப்பட்ட பகுதிக்கு அண்மித்த பகுதியிலேயே அண்மையில் 36 வயதுடைய குடும்பத்தர் அவரது மனைவியின் துணையுடன் அவரது காதலரால் அடித்து கொலை செய்த சம்பவம் இடம் பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2021இல் வெளியிடப்பெற்றது.